**சூரிச் பல்கலைக்கழகத்தின் Kleine Weltentdecker திட்டத்தில் பங்கேற்றல்**

அன்பான பெற்றோர்களே

சிறுவர்கள் தினமும் புதிய விடயங்களை கற்றுக்கொள்ளுவதன் மூலம், பெரியவர்களை ஆச்சரியப்படவைக்கின்றார்கள். சூரிச் பல்கலைக்கழகத்தின் குழந்தைப்பருவம் மற்றும் மழலைப்பருவத்தின் உளவியல்வளர்ச்சித்துறையில் பெரியவர்கள் ஆச்சரியப்படும் சிறுவர்களின் வளர்ச்சியை நாங்கள் தொழிலாக மாற்றியுள்ளோம். சிறுவர்கள் எப்படி உலகத்தை புரிந்துகொள்வார்கள் என்பதை நாங்கள் ஆராய்ச்சிசெய்கின்றோம் - எப்படி சிந்திக்கின்றார்கள், கற்றுக்கொள்ளுகின்றார்கள், செயல்படுகின்றார்கள்.

சென்ற வருடங்களில் சூரிச் மாகாணத்தில் ஆர்வமுள்ள பல பெற்றோர்களும் சிறுவர்களும் எங்கள் ஆய்வுகளில் பங்குபற்றி, எங்கள் ஆராய்ச்சியை பயனுள்ளதாக்கினர். நாங்கள் உங்களை, உங்கள் சிறுவர்களுடன் எமது ஆய்வில் பங்குபற்ற அன்புடன் அழைக்கின்றோம். இதன் மூலம் குழந்தைகள் மற்றும் மழலைகளின் அற்புதமான திறன்களை ஆய்வுசெய்ய, நீங்கள் எமக்கு உதவுவீர்கள். ஆராய்ச்சியின் கேள்வியைப் பொறுத்து உங்கள் குழந்தை குறும்படங்களை பார்க்கலாம் அல்லது தானாக ஏதாவது முயற்சி செய்யலாம். இந்த ஆய்வுகள் சிறுவர்களுக்கு வேடிக்கையாக இருக்கும். பெற்றோர்களாகிய நீங்கள் முழுநேரமும் சிறுவர்களுடன் இருக்கலாம். இந்த ஆய்வானது சுமார் ஒரு மணித்தியாலம் இடம்பெறும். சில ஆய்வுகளில் நீங்கள் வசதியாக வீட்டில் இருந்து online ல் பங்குபற்றலாம்.

நீங்கள் எமது ஆய்வுகளில் பங்குபற்றுவதற்கு விரும்பி, online ல் பதிவு செய்தால் அல்லது இதற்கென தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை பூர்த்திசெய்து கையொப்பமிட்டு அனுப்பிவைத்தால் நாம் மிகவும் மகிழ்ச்சி அடைவோம்.

மேலதிகமாக kleineWeltentdecker App ஐ பாவிப்பதன் மூலம் எங்கள் ஆய்வுகளுக்கு ஒத்துழைப்பு வழங்கலாம். இந்த App ஐ பாவிப்பதன் மூலம், உங்கள் குழந்தைகள், உலகத்தினை புரிந்து கொள்வதற்கு நீங்கள் உதவி செய்ய முடியும். சிறு வயதில் அவர்களின் வளர்ச்சிக்குரிய கேள்விகளுக்கான விடையினை அறிந்து கொள்ளவும், அவர்கள் எவ்வாறு கற்றுக் கொள்கின்றார்கள் என்பதை அறிந்து கொள்ளவும், விசேட சம்பவங்களை மின்னியல் நாளாந்த பதிவேட்டில் பதிந்து கொள்ளவும் முடியும். இந்த App ஐ இலவசமாக App-store ல் இருந்து பெற்றுக்கொள்ளலாம் (மேலதிக விபரங்களை பின்வரும் இணையதளத்தில் பார்வையிடலாம் www.weltentdeckerapp.ch).

எங்கள் ஆராய்ச்சி திட்டங்களை செயற்படுத்துவதற்காக, உங்களை தொடர்பு கொள்வதற்கு, உங்கள் குழந்தையின் குடும்பபெயர், முதற்பெயர் மற்றும் முகவரி ஆகியவை § 18 IDG (தகவல் மற்றும் தரவு பாதுகாப்பு சட்டம்) மேலும் § 21 IDV (தகவல் மற்றும் தரவு பாதுகாப்பு கட்டளை) க்கு அமைய உங்கள் நகராட்சியில் உள்ள குடியிருப்பாளர்கள் பதிவு அலுவலகத்தில் இருந்து எமக்கு வழங்கப்பட்டுள்ளன. இத் தரவுகள் மூன்றாம் தரப்பினருக்கு வழங்கப்படமாட்டாது. நான்கு மாதங்களுக்குள் உங்களிடம் இருந்து இதற்குரிய பதில் எமக்கு கிடைக்காவிட்டால், குடியிருப்பாளர் பதிவு அலுவலகத்தில் இருந்து கிடைக்கப்பெற்ற உங்கள் தகவல்கள் அழிக்கப்பட்டுவிடும். நீங்கள் எந்த நேரத்திலும் எமக்கு வழங்கிய உங்களின் சம்மத கடிதத்தினை மீளப்பெற்றுக்கொள்ளலாம். அப்போது தங்களின் தரவுகள் உடனடியாக அழிக்கப்பட்டுவிடும்.

எங்கள் ஆராய்ச்சி பணிகள் பற்றி மேலும் தகவல்கள் தேவைப்பட்டால் எமது இணையத்தளத்தில் பார்வையிடலாம். உங்களுக்கு ஏதாவது கேள்விகள் இருந்தால் எம்மை மின்னஞ்சல் (weltentdecker@psychologie.uzh.ch) அல்லது தொலைபேசி மூலம் (044 635 74 81) தொடர்பு கொள்ளலாம்.

உங்களுடைய பங்களிப்பினை ஆவலுடன் எதிர்பார்கின்றோம்! உங்கள் ஆதரவுக்கு மிக்க நன்றி!

Prof. Dr. Moritz Daum

உளவியல்வளர்ச்சித்துறை பேராசிரியர்

Marco Bleiker

ஆராய்ச்சித்துறை இணைப்பாளர்